# BSNL ஐ பாதுகாப்போம்… நாட்டைக் காப்போம்…

## (Save BSNL… Save Nation)

# *BSNL… இது உங்கள் சொத்து..*

***அன்பு BSNL சந்தாதார்களுக்கும், பொது மக்களுக்கும், வணக்கம்.***

ஒரேயொரு பைசா கூட மத்திய பட்ஜெட்டுகளில் நிதி ஒதுக்கிடே இல்லாமல்… நூற்றுக்கணக்கான வருடங்களாக நம் முன்னோர்கள், நாம் செலுத்திய தொலைபேசி கட்டணங்களின் சேமிப்பினைக் கொண்டதுதான் பல லட்சம் கோடி ரூபாய் சொத்து மதிப்புள்ள BSNL நிறுவனம்… இது நம் சொத்து.. பொது மக்கள் சொத்து.. இம்மாபெரும் சொத்தினை அடிமாட்டு விலைக்கு பங்குகளாக வெளிநாட்டு உள்நாட்டு பகாசுர கம்பெனிகளுக்கு .. இந்தியாவில் சந்த பொருளாதாரம் அமல்படுத்தப்பட்ட 1990 ஆண்டிலிருந்து விற்றிட… மாறி மாறி ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் மற்றும் BJP அரசுகள் முயற்சித்து வந்துள்ளன.

ஆனால் பொது மக்களாகிய உங்களின் ஆதரவோடு BSNL ஊழியர்களும் அதிகாரிகளுமாகிய நாங்கள் ஒன்றுபட்டு தொடர்ந்து போராடி இன்று வரை BSNL சொத்தினை ஒரேயொரு சதவிகிதம் கூட விற்பனைக்கு அனுமதிக்கவில்லை. (1995-ல் நம் தர்மபுரி, சேலம், ஈரோடு மற்றும் கோவை ஆகிய நான்கு மாவட்டங்களை “Pilot Project” என்ற பெயரில் தனியாருக்கு விற்க முயன்றபோது பொது மக்களாகிய உங்களின் ஆதரவோடு முறியடிக்கப்பட்டதை நாங்கள் பெருமையோடு நினைவு கூறாமல் இருக்கமுடியாது.)

இன்று BJP அரசு… பொது மக்களுக்கு சிறப்பாக சேவை செய்து வரும்… மக்கள் நலத் திட்டங்களுக்கு ஆண்டுதோரும் லட்சக்கணக்கான கோடி ரூபாயை இலாபத்திற்கான ஈவுத்தொகையாக அரசுக்குக் கொடுத்துவரும்… இன்சூரன்ஸ், வங்கி, இரயில்வே, நிலக்கரி, எண்ணெய் நிறுவனங்கள், HMT, BSNL போன்ற நிறுவனங்களை தனியாருக்கு தாரைவார்க்க மிகத்தீவிரமாக முயன்று வருகிறது.

**பொன்முட்டையிடும் வாத்தை அறுப்பதுபோல்…**

எந்த ஒரு தொழில் அல்லது துறை அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகிறதோ அதன் மூலமாக கிடைக்கும் பொருட்களின் விலையோ அல்லது சேவையோ லாப நோக்கமில்லாமல் குறைவான, சரியான கட்டணத்தில் கிடைக்கும். அதே பொருட்கள் அல்லது சேவை தனியார் மூலம் கிடைக்கும் போது அரசின் கட்டணத்தோடு சிறிதளவே முன் பின் இருக்கும். ஏனெனில் அரசின் நிறுவனங்களோடு தனியார் நிறுவனங்கள் போட்டி போட வேண்டி இருப்பதால் தான்.

ஆனால் தனியார் மட்டுமே ஏகபோகமாக இருந்தால் அந்த பொருட்களின் விலையை தனியார் முதலாளிகளே நிர்ணயிப்பதால் கட்டணம் தாறுமாறாகவே இருக்கும்.

- இரயில்வேயில் தனியாரில்லை. அரசின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருப்பதால் தனியார் பேருந்துகளை விட குறைந்த கட்டணம்.
- மின்சாரத்துறை அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அதன் கட்டணம் கட்டுப்பாட்டில் உள்ளது.
- அரசின் ரேஷன் கடை இல்லாதிருக்கமானால் அரிசி, சர்கரை, பருப்பு, மண்ணெண்ணெய் விலையைக் கற்பனை செய்து பாருங்கள்.
- ONGC, BP, HP, IOC இல்லையெனில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை எப்படி இருக்கும்?
- ஆவின் பால் இல்லையெனில் தனியார் பால்விலை விண்ணை முட்டியிருக்கமில்லையா?
- அரசுப் போக்குவரத்து இல்லயெனில் பஸ் கட்டணம் ராக்கெட் வேகத்தில் பறந்திருக்குமல்லவா?
- அரசு மருத்துவமனையே இல்லையெனில் அன்றாடம் காய்ச்சிகளின் ஆரோக்கியம் என்னவாகும்?

- தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இல்லையெனில் பொது மக்களின் சேமிப்பிற்கு மிகக் மிகக் குறைந்த வட்டியே கிடைக்கும். சாமானியர்களுக்கு கடன் என்பது எட்டாக் கனியாகவே இருந்திருக்கும்.
- LIC, GIC, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் இல்லையெனில் 1974ம் ஆண்டிற்கு முன்பிருந்ததுபோல் பணம் கட்டியவர்களுக்கு பட்டை நாமமே கிடைக்கும்.
- தொலைத் தொடர்பு துறையில் 1995 முதல் 2002 வரை மொபைல் சேவை வழங்க தனியார் கம்பெனிகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது. அப்போது Outgoing Call ரூ.16/-ம், Incoming Callக்கு ரூ.8/- என்றும் தனியார் கம்பெனிகள் கொள்ளையடித்துக்கொண்டிருந்தன.
- பொதுத் துறை நிறுவனமான BSNL செல் சேவை வழங்க 2002-ல் அனுமதிக்கப்பட்டவுடன் தனியார் நிறுவன்ங்களாலும் Outgoing Call ரூ.16/- லிருந்து ரூ.1/- க்கு குறைக்கப்பட்டதை அனைவரும் அறிவீர். Incoming Call இலவசம் என்று BSNL நிறுவனம் அறிவித்த பின்பு தான் அனைத்து தனியார் கம்பெனிகளும் அறிவிக்க முன்வந்தன என்பது எதார்த்தமான உண்மை.
- 2002-ல் செல் சேவை கொடுக்க ஆரம்பித்தாலும் 2006-ல் செல் சேவையில் 2 இடத்திற்கு முன்னேறியது BSNL நிறுவனம்.
- 2008 வரை 10,000 கோடி என்ற அளவிற்கு லாபத்தோடு இயங்கிக்கொண்டிருந்த நிறுவனம் BSNL

BSNL ஊழியர்களாகிய நாங்கள் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை கொடுக்க தயாராக உள்ளோம். ஆனால், மத்திய அரசு மற்றும் BSNL உயர் மட்ட நிர்வாகத்தின் தவறான கொள்கைகளாலும், தவறான சந்தைப் பொருளாதாரத்தை கடைபிடித்ததாலும் மற்றும் BSNLன் கையிருப்பில் இருந்த 40,000 கோடி ரூபாய்களை பல்வேறு காரணங்களைக் காட்டி அரசாங்கம் எடுத்துக் கொண்டதாலும், BSNLன் விரிவாக்கத்திற்கு தேவையான உபகரணங்களை தேவையான நேரத்தில் கொள்முதல் செய்யாமல் போனது. அதன் விளைவாக விரிவாக்கம் பாதிக்கப்பட்டது. அதன் காரணமாக 2009ஆம் ஆண்டு முதல் நஷ்டத்தை சந்திக்க துவங்கி இன்று வரை நஷ்டத்திலேயே இயங்குகிறது. கிராமப்புற சேவைகளை அரசுத்துறைகள் மட்டுமே கொடுப்பதால் ஏற்படும் நஷ்டத்தொகையை ஒப்புக்கொண்டபடி மத்திய அரசு BSNL நிறுவனத்திற்கு வழங்க மறுக்கிறது.

இன்று நஷ்டத்தை காரணம் காட்டி BSNL டவர்/கேபிள்களை விற்று BSNLஐ முடமாக்கிட BJP அரசாங்க திட்டமிட்டு வருகிறது. பொது மக்களுக்கு சேவை செய்யும் BSNL நிறுவனத்தை விற்றால்.. தனியார் கம்பெனிகள் ஏகபோகமானால்.. கேட்பாரின்றி தொலைபேசி./ கைபேசி கட்டணங்கள் தாறுமாறாக உயரும்,,

அது மட்டுமல்ல.. இராணுவ ரகசியங்களுக்கும் பாதுகாப்பில்லை.. எனில் நம் தாய்த்திரு நாட்டிற்கும் பாதுகாப்பில்லை..

எனவே BSNL சந்தாதாரர்களே, பொது மக்களே! BSNLஐ விற்கவிடாமல் தடுக்கவும், BSNL துறையின் புத்தாக்கத்திற்காகவும் நாங்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவளித்தும், எங்களோடு சேர்ந்து போராடியும் BSNLஐ காக்கவும், நாட்டை காக்கவும் அன்புடன் அறைகூவி அழைக்கின்றோம்…

BSNLஐ பாதுகாக்க நாடு முழுவதும் இருந்து ஒரு கோடி தேசபக்த மக்களிடம் கையெழுத்து பெற்று பாரத பிரதமரிடம் சமர்ப்பிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த மனுவில் நீங்கள் போடும் கையெழுத்து என்பது பொது மக்களின் சொத்தாக இருக்கின்ற BSNLஐ பாதுகாக்க நாட்டின் பாதுகாப்பிற்காக நீங்கள் போடும் உத்தரவு.

**தொழிலாளர்களும், பொதுமக்களும் ஒன்று படுவோம்,**
**மக்கள் சொத்தாம் BSNLஐ பாதுகாப்போம். தேசத்தை பாதுகாப்போம்.**

வாழ்த்துக்களுடன்,

**FORUM OF UNIONS/ASSOICATIONS OF EXECUTIVES/NON EXECUTIVES OF BSNL**